***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No.189/2015 – P.W. 3 (LW1)***

| | |
|---|---|
| *Name* | புலிதேவன் |
| *Father/Husband's Name* | பாலகுரு |
| *Village* | மூவர்கோடடை |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 69 |

**எதிரிகள் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.09.2025.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தேவங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.

கடந்த 11.07.2015 ம் தேதியன்று மன்னார்குடி நெடுஞ்சாலை ரோந்து பணியில் இருந்தபோது இரவு 10.30 மணியளவில் மன்னார்குடி பைபாஸ் ரோடு பாரதிதாசன் பள்ளி அருகே நானும், தலைமை காவலர் 388 ஆறுமுகம், Y.B. 05 சுவாமிநாதன் மூவரும் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பைபாஸ் ரோட்டில் வந்த TVS 50 XL இருச்சக்கர வாகனத்தில் வந்த நபரை நிறுத்தி சோதனை செய்த போது அவர் வந்த இருச்சக்கர வாகன முன்பக்க பதிவு எண் பலகை இல்லை. பின்பக்க பதிவு எண் பலகையில் TN 55 AZ 7471 என்ற வாகனத்தை நிறுததி அவர் வைத்திருந்த மஞ்சள் நிற பையை சோதனை செய்தபோது பள்ளி மாற்றுசான்றிதழ் ஒன்றும், இரண்டு ரப்பர் ஸ்டாம்புகளும் இருந்தன. அந்த மாற்று சான்றிதழில் ஷேக் முஜுபு ரகுமான் என்ற பெயரும், எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை என்றும், பள்ளி மாற்று சான்றிதழ் அளிக்க தகுதி உடைய நபரின் கையொப்பம் சான்றிதழில் இல்லை. அந்த இரண்டு ரப்பர் ஸ்டாம்புகளிலும் திருவள்ளுவர் மேல்நிலைபள்ளி, ஆலங்கோட்டை என்று பொறிக்கப்பட்டியிருந்தன.

அவரை விசாரித்ததில் இம்ரான்கான் என்றும், வடச்சேரி ரோட்டில் மளிகை கடை வைத்திருப்பதாகவும், மேலும், அவர் வைத்திருந்த ரப்பர் ஸ்டாம்புகள் மற்றும் மாற்றுசா்னறிதழ் பற்றி விசாரித்தபோது மன்னார்குடி சாமி தியேட்டர் அருகே DTP கடை வைத்திருக்கும் முருகன் என்பவர் தயாரித்து கொடுத்ததாக கூறினார். பின்னர் 1 வது எதிரியை அழைத்துக்கொண்டு சாமி தியேட்டர் அருகே உள்ள DTP கடையில் இருந்த 2 வது எதிரியை விசாரித்தோம். அவரை விசாரித்ததில் மன்னார்குடி திருமஞ்சன வீதியை சேர்ந்த மனோகரன் வாத்தியார் என்பவர் செய்ய சொன்னதாக கூறினார். மேலும், 1வது எதிரியின் அண்ணனனான ஷேக் முஜீபு ரகுமான் என்பவர் வெளிநாடு செல்வதற்காக பாஸ்போர்ட் தயார் செய்யவதற்காக செய்ய சொன்னதாகவும் கூறினார். மேற்படி 1 வது எதிரியிடம் இருந்து ரப்பர் ஸ்டாம்புகள்-2 மற்றும் மாற்று சான்றிதழ் என்னுடன் பணியில் இருந்த தலைமை காவலர் ஆறுமுகம், Y.B. சுவாமிநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் என்னால் கைப்பற்றி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அவை ஏற்கெனவே அசா.ஆ.1 மற்றும் அசா.பொ.1 & 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகளுடன் 1 வது எதிரி வைத்திருந்த பள்ளி மாற்று சான்றிதழ், ரப்பர் ஸ்டாம்புகள் மற்றும் இருச்சக்கர வாகனம் ஆகியவற்றை மன்னார்குடி நகர காவல் நிலையம் வந்து சம்பவ குறித்து நடவடிக்கை எடுக்க ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இச்சம்பவம் குறித்து புகார் மனு எழுதிக்கொடுத்தேன்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**(அசா.1 மற்றும் அசா.3 ஆகியோர்கள் தங்களுடைய சாட்சியத்தில் மன்னார்குடி திருமஞ்சன வீதியில் உள்ள மனோகரன் வாத்தியார் என்பவர் வழக்கில் கண்ட அசா.ஆ.1 மற்றும் அசா.பொ.1&2 ஆகியவற்றை தயார் செய்யசொன்னதாக எதிரிகள் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவரை வழக்கின் எதிரியாக சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் சாட்சியம் நிறுத்தி வைக்கப்படுகிறது.)**

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.